*18*

# கொடுத்தல் உங்களுக்கு என்ன செய்யும்

## [பிலிப்பியர் 4:14-20]

நமது முந்திய படிப்பில் நாம், பிலிப்பியருக்குப் பவுல் எழுதிய நிருபத்தின் முடிவில் உள்ள "உங்களுக்கு நன்றி" குறிப்பின் மீது ஒரு பரிசோதனையைத் தொடங்கினோம். அப்போஸ்தலர் இந்த நிருபத்தின் தொடக்கத்தில் கொடையைப் பற்றிக் குறிப்பிட்டுவிட்டு இதன் முடிவு வரையிலும் தமது பாராட்டுதலின் வெளிப்படுத்துதலை நிறைவு செய்யாது இருந்தது ஏன் என்று சிலர் வியப்படைகின்றனர். இது குறைவான ஒருங்கமைப்புக் கொண்ட ஒரு தனிப்பட்ட கடிதம் என்பதை மனதில் வைத்துக் கொள்ளுங்கள். பவுல், தமது நிருபத்தைப் பெறுபவர்கள், தமது விருப்ப நோக்கத்தை அறிய உடனடியாக அனுமதித்தார், ஆனால் நன்றியுணர்வின் வார்த்தைகளை அவர், இந்த நிருபத்தின் உச்சகட்ட முடிவு வரையிலும் எழுதாது விட்டு வைத்திருந்தார்.

பயிற்றுவிப்பவர் ஒருவர் தமது வகுப்பில் இருப்பவர்களுக்கு "உங்களுக்கு நன்றி" என்பதைக் கூறும் ஒரு வழியைப் பற்றி எடுத்துரைத்தார். அவர், "ஒரு 'நன்றி சாண்ட்விட்சை' பயன்படுத்துங்கள். 'நன்றி' என்று கூறுங்கள். அது அந்த சாண்ட்விட்சின் மீதான ரொட்டித்துண்டின் அடிப்பாகமாக உள்ளது. பின்பு பொருத்தமான விபரங்களைக் கூட்டுங்கள். அது அந்த சாண்ட்விட்சை நிரப்பும் பொருளாக உள்ளது. கடைசியில், 'உங்களுக்கு நன்றி' என்று மீண்டும் கூறுங்கள். அது சாண்ட்விட்சின் மீதுள்ள ரொட்டித் துண்டின் மேல்பாகமாக உள்ளது" என்று கூறினார். பவுல் ஒருக்காலும் "நன்றி சாண்ட்விட்ச்" பற்றிக் கேள்விப் பட்டிருக்க மாட்டார் என்று நான் நிச்சயமாக நம்புகிறேன், ஆனால் அவர் பிலிப்பியர்களுக்கு இதையே கொடுத்தார்.

"நன்றி என்பதற்கான (*eucharistia*, என்ற) கிரேக்க வார்த்தையைப் பவுல், நன்றிக்கான தமது வெளிப்பாட்டில் ஒருமுறைகூடப் பயன்படுத்தவில்லை என்பது பவுலின் நன்றி வெளிப்பாட்டில் மிகவும் கவனத்திற்குரிய விஷயமாக இருக்கவாம். உண்மையில், பிலிப்பியர் 4:10-20ல் உள்ள அப்போஸ்தலரின் நன்றியுணர்வின் வெளிப்பாடு, எழுதப்பட்டவற்றிலேயே மிகவும் வழக்கத்திற்கு மாறான "உங்களுக்கு நன்றி" குறிப்புகளில் ஒன்றாக உள்ளது. இந்தப் பாடக்கருத்தைப் பவுல் ஏன் இவ்வாறு அணுகினார் என்பதைப் புரிந்துகொள்ளுதலானது, நிதி சார்ந்த ஆதரவு பற்றி அவரது எண்ணப்போக்கில் சிலவற்றை அறிய நமக்கு உதவலாம்.

வசனத்தைப் போதிப்பவர்களும் பிரசங்கிப்பவர்களும், போதிக்கப் படுபவர்களால் ஆதரிக்கப்படவேண்டிய உரிமை கொண்டுள்ளனர் என்று இயேசு வலியுறுத்தி இருந்தார் (லூக்கா 10:7). பவுலும் இதே விஷயத்தைக்

கூறினார் (1 கொரிந்தியர் 9:9-11, 13, 14; கலாத்தியர் 6:6). ஒரு சுவிசேஷ ஊழியர் "உலகப் பிரகாரமான" வேலை ஒன்றைக் கொண்டிராதபோது, அவர் படிக்கவும், போதிக்கவும் மற்றும் மக்களின் தேவைகளுக்கு ஊழியம் செய்யவும் அதிகமான நேரத்தைத் தாராளமாகச் செலவிடக் கூடியவராக இருக்கிறார்.

இருப்பினும் பவுல்,தாம் இந்த *நிருபத்தை எழுதிய வேளையில்* ஊழியம் செய்து கொண்டிருந்த சபைக் குழுமத்தில் இருந்து உதவியை ஏற்றுக்கொள்ளத் தயங்கினார் (காண்க 1 கொரிந்தியர் 9:18; 2 கொரிந்தியர் 11:7, 9; 1 தெசலோனிக்கேயர் 2:9; 2 தெசலோனிக்கேயர் 3:8). பணம் பெறுதலே பிரசங்கித்தலுக்கான தமது நோக்கம் என்று எவரொருவரும் நினைப்பதற்கு அவர் விரும்பவில்லை (காண்க 2 கொரிந்தியார் 12:14). அப்போஸ்தலர் கூடாரம் செய்பவர் என்ற வகையில் வேலை செய்ததினால் தமக்குதாமே அடிக்கடி உதவி செய்து கொண்டார் (நடபடிகள் 18:1-3; காண்க 1 கொரிந்தியர் 4:12அ; 1 தெசலோனிக்கேயர் 2:9; 2 தெசலோனிக்கேயர் 3:8).

அதே வேளையில் பவுல், தாம் *முன்பு* பிரசங்கித்திருந்த இடங்களில் இருந்து உதவியைப் பெற்றுக்கொள்ள மனவிருப்பமாக இருந்தார்(காண்க 2 கொரிந்தியர் 11:8, 9). அப்படிப்பட்ட உதவி, சுவிசேஷத்தைப் பரப்புவதற்கு அவர் அதிக நேரம் செலவிட அவரை அனுமதித்தது (காண்க நடபடிகள் 18:5). இருப்பினும் அவர், "பணத்திற்காக பிரசங்கித்தார்" என்று சிலர் தம்மைக் குற்றப்படுத்தும் சாத்தியக் கூறு பற்றிக் கூருணர்வு கொண்டவராக நிலைத்திருந்தார்.

இது பவுலுக்குள்ளாக உருவாக்கிய மன இறுக்கமானது, பிலிப்பியர்களுக்கு அவர் தமது நன்றிகளை ஏன் இவ்வாறு வெளிப்படுத்தினார் என்று விளக்கமளிக்க நமக்கு உதவலாம். அவர்களின் கொடையைத் தாம் பாராட்டியதை அவர்கள் அறியவேண்டும் என்று அவர் விரும்பினார், ஆனால் *கொடைகளைப்* பெறுவதற்காகவே அவர் பிரசங்கித்தார் என்ற மனப்பதிவை விட்டுச்செல்ல அவர் விரும்பவில்லை. நமது முந்திய பாடத்திற்கான வேதவசனப் பகுதியில், அவர் முதலில் அவர்களின் உதவிக்காகச் சந்தோஷப்பட்டதாகக் கூறினார் (4:10), ஆனால் பின்பு அவர், அப்படிப்பட்ட உதவியைத் தாம் சார்ந்திருக்கவில்லை என்றும் கூடுதலாகக் கூறினார் (வசனங்கள் 11-13). இருப்பினும், பாராட்டாதவராக காணப்படுவதைத் தவிர்ப்பதற்கு உடனடியாக, அவர்கள் தமக்கு உதவி செய்தது நலமாக இருந்தது என்பதையும் கூடுதலாய்க் கூறினார் (வசனம் 14). 10 முதல் 20வரையிலான வசனங்களை ஆராய்தல் என்ற நமது படிப்பை நாம் தொடருகையில், பவுல் தாம் பெற்றுக்கொண்ட கொடைக்காக பாராட்டுதலை வெளிப்படுத்துதல் (வசனங்கள் 14-16, 19) மற்றும் தாம் உதவி பெற்றிருக்க *வேண்டும்* என்பதை மறுத்தல் (வசனம் 17அ) ஆகிய நிலைப்பாடுகளுக்கு இடையில் முன்னும் பின்னுமாக அசைவதை நாம் காண்போம்.

"கொடுத்தல் *உங்களுக்கு* என்ன செய்யும்" என்பதே இந்த எடுத்துரைப்பின் தலைப்பாக உள்ளது. கொடுத்தல் பற்றிய நமது கண்ணோட்டமானது, அதைக் கொடுப்பவருக்கு அது என்ன செய்யக்கூடும்/முடியும் என்பது பற்றிச் சிறிதளவே சிந்தனையுடன், அதைப் பெறுபவர்களுக்கு அது என்ன செய்யும் என்பதுடன் அடிக்கடி மட்டுப்படுத்தப் பட்டுவிடுகிறது. வேதாகமத்தின்படி, கொடுத்தல் என்பது அதைப் பெறுபவரைக் காட்டிலும் கொடுப்பவருக்கு அதிகப் பயன்களைக் கொடுக்கிறது (காண்க மல்கியா 3:10; லூக்கா 6:38; நடபடிகள்

*20:35; 2 கொரிந்தியர் 9:6-11).*

## பகிர்ந்து கொள்ளுதலின் ஆசீர்வாதம் (4:14, 15)

பவுல், ''ஆகிலும் நீங்கள் என் உபத்திரவத்தில் என்னோடே உடன்பட்டது நலமாயிருக்கிறது'' என்று கூறிய 14ம் வசனத்தில் இருந்து நாம் தொடங்குவோமாக. இவ்வசனத்தில், "உபத்திரவம்" [''affiction''] என்று மொழிபெயர்க்கப்பட்ட (*thlipsis* என்பதன் ஒரு வடிவமான) கிரேக்க வார்த்தை, 1:16 விலும் "உபத்திரவம்" [''distress''] என்று மொழிபெயர்க்கப்பட்டது. முந்திய பாடத்தில் குறிப்பிடப்பட்டபடி, இது ஒரு பலமான வார்த்தையாக உள்ளது. இது "சூழ்நிலைகளின் அழுத்தங்களினால் அல்லது நபர்களின் பகைமை உணர்வினால் ஏற்படும் பாடுகளை,'' "ஆவியை வருத்துகிற எந்த விஷயத்தையும்'' பற்றிய குறிப்புக் கொண்டுள்ளது.[1] NIV வேதாகமத்தில் "எனது இடர்ப்பாடுகளில் நீங்கள் பங்கேற்றது நன்மையாக இருந்தது'' என்றுள்ளது. பவுலின் "இடர்ப்பாடுகளில் சில, நிதிசார்ந்தவையாக இருந்தன'' என்பதில் சந்தேகம் இல்லை (காண்க வசனம் 18).

அப்போஸ்தலரின் நிதிநிலை நெருக்கடிகளைப் பற்றிப் பின்வருபவற்றை ஆழ்ந்து சிந்தித்துப் பாருங்கள். சிலவேளைகளில் பவுல், தாம் முன்பு பிரசங்கித்திருந்த இடங்களில் இருந்து உதவி பெற்றார், சில வேளைகளில் அவ்வாறு பெறாதிருந்தார். கடந்த காலத்தில், அவர் ஒரு கூடாரம் செய்பவர் என்ற வகையில் தொழில் செய்து பிழைக்க முடிந்திருந்ததால், இது (நிதி உதவி பெற்றதோ அல்லது பெறாதிருந்ததோ) ஒரு பிரச்சனையாக இருக்கவில்லை. இருப்பினும், நான்கு அல்லது அதற்குச் சற்றேறக் குறையலான ஆண்டுகளாக (காண்க நடபடிகள் 24:27; 28:30) அவர் சிறையில் அடைக்கப்பட்டு அதனால் வேலை செய்ய இயலாத நிலையில் இருந்தார். இது உக்கிரமான சுயாதீனரான அவரை, மற்றவர்களின் தாராளகுணத்தின் மீது சார்ந்திருக்கச் செய்தது. அவர் இந்தச் சூழ்நிலையைச் சிலவேளைகளில் அசௌகரியமாகக் கண்டாரா? ஒருவேளை அவ்வாறு அவர் கண்டிருக்கலாம்.

பவுலின் நன்றிகூறுதலின் வெளிப்பாட்டை நான் வாசிக்கையில், பிலிப்பி நகரில் இருந்து உதவி வந்து சேர்ந்த வேளையில், அவரது நிதிநிலை ஆதாரமூலங்கள் ஏறக்குறைய வற்றிப்போயிருந்தன என்ற மனப்பதிவை நான் பெற்றேன். இவ்வாறாக அவர், "... நீங்கள் என் உபத்திரவத்தில் என்னோடே உடன்பட்டது நலமாயிருக்கிறது'' என்று அவர்களுக்கு நிச்சயப்படுத்தினார். "நலமாயிருக்கிறது'' (Gk.: *kalos*) என்ற வார்த்தை, "உள்ளார்ந்த வகையில் நல்லதாக இருக்கிற, எனவே நலமான, நியாயமான, வனப்பான என்பதைக் குறிக்கிறது.''[2] செயல்விளைவில் பவுல், ''நீங்கள் வனப்புமிக்க சரியான விஷயத்தைச் செய்தீர்கள்'' என்று கூறினார்.

இருப்பினும் 14ம் வசனத்தில் உள்ள ''உடன்பட்டது'' என்பதே நான் வலியுறுத்த விரும்பும் வார்த்தையாக உள்ளது: அவர்கள் *உடன்பட்டதில்* நலமாய்ச் செய்திருந்தனர். இந்த நிருபத்தின் முதல் பகுதியில் பவுல், கடந்த காலத்திலும் நிகழ்காலத்திலும் பிலிப்பியர்கள் தம்முடன் "பங்குள்ளவர்களாக'' இருந்தனர் என்ற உண்மையைக் குறிப்பிட்டார் (1:5, 7).

*“உடன்படுதல்/பங்குள்ளவர்களாகுதல்” என்ற வார்த்தை 4:15லும் பயன்படுத்தப் பட்டுள்ளது: “… கொடுக்கல் வாங்கல் காரியத்தில் நீங்கள் மாத்திரம் எனக்கு உடன்பட்டதேயல்லாமல், வேறொரு சபையும் உடன்படவில்லை.” 14ம் வசனத்தில் ‘‘உடன்படுதல்’’ என்பது, sunkoinoneo என்ற வார்த்தையின் ஒரு வடிவத்தில் இருந்து மொழிபெயர்க்கப்பட்டுள்ளது, இது koinonia (“பொதுவாக கொண்டிருத்தல்”) என்பதன் வினைச்சொல் வடிவத்திற்கு முன் sun (“உடன்”) என்ற முன்னிடைச் சொல்லைச் சேர்த்துப் பெறப்பட்ட கூட்டு வார்த்தையாகும். பிலிப்பியர்கள் பவுலின் நிதிசார்ந்த சுமையைத் தங்கள் மீது ஏற்றுக் கொண்டபோது, அவர்கள் பவுலுடன் ஐக்கியம் கொண்டிருந்தார்.*

*நீங்களும் நானும் கர்த்தருடைய ஊழியத்திற்காகக் கொடுக்கும்போது, அது நமக்கு என்ன செய்கிறது? முதலாவதாக அது, நம்மைக் கர்த்தருடைய ஊழியத்திற்கு உடன்படச் செய்கிறது. நாம் உதவி செய்யும் எந்த ஊழியத்திலும் நாம் பங்காளிகள் ஆகிவிடுகிறோம். செய்யப்படும் ஊழியம் பற்றிய நல்ல அறிக்கைகளை நாம் கேள்விப்படுகையில், அது நடைபெறச் செய்வதில் நாம் ஒரு பங்கை - வலிவார்ந்த ஒரு பங்கை - பெற்றுள்ளதை அறிகிறோம்!*

## *உதவி செய்தலின் மனதிருப்தி (4:15, 16, 18அ)*

*மற்றவர்களுக்கு உதவி செய்யப்பட்டுள்ளது என்று அறிவதில் ஏற்படும் மனதிருப்தி என்பது, அந்த ஆசீர்வாதத்துடன் நெருங்கிய வகையில் பிணைக்கப்பட்டுள்ளது. பவுலின் பாராட்டுதலின் வெளிப்பாட்டைப் பிலிப்பியர்கள் வாசிக்கையில், அவர்கள் அந்த மனதிருப்தியை மகிழ்வுடன் அனுபவித்து இருப்பார்கள் என்பது உறுதி.*

*முதலாம் அதிகாரத்தை நாம் படிக்கையில், பிலிப்பியர்கள் பவுலுக்கு உதவியது இந்த ஒரு முறை மாத்திரமல்ல என்று நாம் குறிப்பிட்டிருந்தோம் (காண்க 1:5). அப்போஸ்தலர் பிலிப்பி நகரில் சபையை நிலைநாட்டியிருந்தது முதல் பத்து அல்லது அதற்குச் சற்றேறக் குறையலான ஆண்டுகளில் அவர்களின் உதவியைப் பற்றித் தெளிவாக அறிந்திருந்தார்:*

> மேலும், பிலிப்பியரே, சுவிசேஷத்தின் ஆரம்பத்திலே நான் மக்கெதோனியாவிலிருந்து புறப்பட்டபோது, கொடுக்கல் வாங்கல் காரியத்தில் நீங்கள்மாத்திரம் எனக்கு உடன்பட்டதேயல்லாமல், வேறொரு சபையும் உடன்படவில்லை என்று நீங்கள் அறிந்திருக்கிறீர்கள். நான் தெசலோனிக்கேயிலிருந்தபோதும், என் குறைச்சலை நீக்கும்படி நீங்கள் இரண்டொருதரம் அனுப்பினீர்கள் *(4:15, 16).*

*15ம் வசனம், ‘‘… என்று நீங்க(ளும்) அறிந்திருக்கிறீர்கள்’’ என்ற சொற்றொடருடன் முடிகிறது. “உம்” என்ற வார்த்தை (இது தமிழ் வேதாகமத்தில் இவ்விடத்தில் இவ்வாறு இல்லை) அவர்களின் தாராள குணத்தைப் பவுல் அறிந்திருந்தார் என்றும், அவர் அறிந்திருந்தார் என்பதை அவர்கள் அறிந்திருந்தனர் என்றும் மறைமுகமாகக் குறிப்பிடுகிறது. ‘‘சுவிசேஷத்தின் ஆரம்பத்திலே’’ என்ற சொற்றொடர் பற்றி* NASB *வேதாகமத்தில் பின்வரும் குறிப்பு உள்ளது: “நேரடியான அர்த்தத்தில்,* தொடக்கத்தில்.*” இது பிலிப்பியர்களைப் பொறுத்த மட்டில் சுவிசேஷம் பிரசங்கிக்கப்படத் தொடங்கப்பட்டதைக் குறிக்கக்*

கூடும். NIV வேதாகமத்தில், "சுவிசேஷம் உங்களுக்குப் பழக்கமான தொடக்க நாட்களில்" என்றுள்ளது. இருப்பினும், இவ்வார்த்தைகள் அனேகமாக, பிலிப்பி நகரில் *தொடக்கம்* கொண்டிருந்த பவுலின் ஊழியத்தினுடைய ஒரு புதிய வளர்ச்சிப்படியை மாத்திரம் குறிப்பிடலாம் (நடபடிகள் 16:9-12; காண்க பிலிப்பியர் 1:5).

15ம் வசனத்தில் பவுல், மக்கெதோனியாவை விட்டுப் புறப்பட்டதைப் பற்றிக் குறிப்பிட்டார். பிலிப்பி நகரம் மக்கெதோனியாவில் இருந்தது (நடபடிகள், 16:12) இது இப்போதுள்ள கிரேக்க நாட்டின் வடக்குப் பகுதியாகும். அப்போஸ்தலர் அந்தப் பகுதியை விட்டுப் பிறப்பட்டபின்னர், அவர் இப்போதுள்ள கிரேக்க நாட்டின் தெற்குப் பகுதியான அகாயாவிற்குச் சென்றார். அங்கு அவர் அத்தேனே மற்றும் கொரிந்து ஆகிய நகரங்களில் பிரசங்கித்தார் (நடபடிகள் 17:15-18:11). பிலிப்பியர்களுக்கு பவுல், "... நான் மக்கெதோனியாவிலிருந்து புறப்பட்டபோது, கொடுக்கல் வாங்கல் காரியத்தில் நீங்கள்மாத்திரம் எனக்கு உடன்பட்டதேயல்லாமல், வேறொரு சபையும் உடன்படவில்லை" என்று கூறினார். 2 கொரிந்தியர் 11:8, 9ம் வசனங்களில் இருந்து நாம், பவுல் கொரிந்து நகரில் இருந்தபோது அவருக்குப் பிலிப்பியர்கள் உதவி அனுப்பினார்கள் என்று முடிவு செய்கிறோம்.

இருப்பினும் பவுல், 2 கொரிந்தியர் 11:8, 9ல் கொரிந்து நகரில் பெற்றுக்கொண்ட உதவியைப் பற்றி எழுதியபோது, அவர் "சபைகள்" என்று பன்மைச் சொல்லைப் பயன்படுத்தினார். அப்படியென்றால், பிலிப்பியர் 4:15ல் அவர், "கொடுக்கல் வாங்கல் காரியத்தில் *நீங்கள்மாத்திரம்* எனக்கு உடன்பட்டதேயல்லாமல், வேறொரு சபையும் உடன்படவில்லை" என்று கூறியபோது எதை அர்த்தப்படுத்தினார்? எழுத்தாளர்கள், "கொடுக்கல் வாங்கல் காரியத்தில்" என்ற வார்த்தைகளின் மீது சிறப்பான விளக்கங்களை இடுவதைக் கொண்டு இதை விளக்கப்படுத்த முயற்சி செய்துள்ளனர். பவுலுக்குப் பிலிப்பியர்கள் நிதிசார்ந்த உதவியை "கொடுத்து" ஆவிக்குரிய உதவியை "வாங்கி" கொண்டனர் என்று சிலர் கூறுகின்றனர். மற்றவர்கள், பவுலுக்குப் பிலிப்பியர்கள் "கொடுத்து" அதற்கான ரசீது ஒன்றை அவரிடத்தில் இருந்து பெற்றுக்கொண்டனர் என்று முடிவு செய்கின்றனர். இந்த விளக்கங்களை வாசிக்கையில் நான், "ஆனால் பவுலுக்கு உதவியை அனுப்பிய *எந்த* சபைக்குழுமத்தைப் பொறுத்த மட்டிலும் இந்த ஏற்பாடுகள் இரண்டுமே உண்மையாக இருப்பதில்லையா?" என்று நினைத்தேன். "கொடுக்கல் வாங்கல்" என்பதற்கு, பிலிப்பியர்கள் உதவி கொடுத்தனர் மற்றும் பவுல் அதை வாங்கிக்கொண்டார் என்பதே மிகவும் எளிய விளக்கமாக உள்ளது.

அது "நீங்கள் மாத்திரம்" என்ற புதிரான சொற்றொடரை இன்னமும் விட்டுவைக்கிறது. ஒருவேளை பவுல், பிலிப்பியில் இருந்த சபை மாத்திரம் தமக்குத் *தொடர்ந்து* உதவியிருந்தது என்பதை வலியுறுத்தி இருக்கலாம் - இது ஒன்று மாத்திரமே அவரது ஊழிய முயற்சிகளில் *நிலையான* "பங்காளியாக" இருந்தது. "நீங்கள்மாத்திரம்" என்ற வார்த்தைகளின் உண்மையான தனிச்சிறப்பு என்னவாக இருந்தாலும், பிலிப்பி நகரில் இருந்த கிறிஸ்தவர்களினால் வழங்கப்பட்ட *தனிசிறப்பான* ஊழியத்தைப் பவுல் வலியுறுத்தினார்.

பவுல் மக்கொதோனியாவை விட்டுப் புறப்பட்டுச் சென்ற பின்பு, பிலிப்பியர்களின் உதவியைப் பற்றி நினைக்கையில், அவர் அந்த மாகாணத்தை விட்டுப் புறப்படுவதற்கு முன்னரேகூட, அவர்களின் உதவி

*தொடங்கியிருந்ததை நிறைவுகூர்ந்தார். பிலிப்பி நகரில் இருந்து அவர் தெசலோனிக்கே நகருக்கு, எக்னேஷியா வழி என்ற ரோம நெடுஞ்சாலையில், மேற்குநோக்கி ஒரு நூறு மைல்கள் பயணம் செய்திருந்தார் (நடபடிகள் 16:39-17:1). அங்கு அவர் சற்றுக்காலம் பிரசங்கித்தார். அங்கிருக்கையில் அவர் தமது தொழிலைச் செய்தார் (காண்க 1 தெசலோனிக்கேயர் 2:9; 2 தெசலோனிக்கேயர் 3:8) ஆனால் பிலிப்பியிலிருந்து உதவியையும் பெற்றார். "நான் தெசலோனிக்கேயிலிருந்தபோதும், என் குறைச்சலை நீக்கும்படி நீங்கள் இரண்டொருதரம் அனுப்பினீர்கள்" என்று பவுல் எழுதினார் (பிலிப்பியர் 4:16).*

*இதைப்பற்றி நாம் நினைக்கும்போது, இது திகைப்புக்கு உரியதாக இருக்கிறது. பிலிப்பி நகரில் இருந்த சபை சிறியதாகவும் விசுவாசத்தில் இளையதாகவும் இருந்தது. வேதாகம ரீதியான மற்றும் உலகப் பிரகாரமான வரலாற்றின்படி, அந்தப் பகுதியில் இருந்த குடிமக்கள் நிதிநிலை சார்ந்த வகையில் போராடிக்கொண்டிருந்தனர் (காண்க 2 கொரிந்தியர் 8:1-4). தெசலோனிக்கே ஒரு பெரிய, அதிக செல்வ வளமிக்க நகராக இருந்தது. இருந்தபோதிலும் அங்கு இருந்த பவுலுக்குப் பிலிப்பியில் இருந்த கிறிஸ்தவர்கள் உதவி அனுப்பி இருந்தனர்.*

*ஊழியப்பணியைத் தொடங்குதல் என்பது ஒரு சபைக்குழுமத்திற்கு ஒருக்காலும் மிகவும் முந்திய வேளை என்பதாக இருப்பதில்லை. சிலவேளைகளில் உறுப்பினர்கள், "இந்தப் பகுதியில் நாம் உறுதியாக நிலைநாட்டப்பட்ட பின்பு, நாம் மற்ற இடங்களுக்குக் கர்த்தரின் ஊழியத்திற்கு உதவிசெய்ய நிதிகளை அனுப்புவோம்" என்று விவாதம் செய்கின்றனர். "ஒரு சபைக்குழுமம், நாம் ஒரு கட்டிடத்தை கட்டி முடித்த உடன்" அல்லது "ஒரு பிரசங்கியாருக்கு நாம் ஊதியம் கொடுக்கக் கூடியவர்களான உடன்" அல்லது "நாம் நமது சொந்தத் தேவைகளைக் கவனிக்கக் கூடியவர்கள் ஆன உடன்" - "அதன் பின்பு நாம் மற்ற இடங்களில் உள்ள இழந்துபோகப் பட்டிருப்பவர்களைப் பற்றி நினைப்போம்" என்று நினைக்கலாம். பிலிப்பியில் இருந்த சபை இவ்வாறு வாதிடவில்லை. சிறியதாகவும் ஏழ்மையானதாகவும் இருந்தபோதிலும் இந்த சபைக்குழுமம் தங்களால் முடிந்த அளவுக்குப் பவுலுக்கு உடனே உதவத் தொடங்கிற்று - மற்றும் அவர்கள் ஒரு பத்தாண்டுகள் வரையிலும் அந்த உதவியைத் தொடர்ந்து கொடுத்திருந்தனர். மற்றவர்களின் தேவைகளைப் பற்றி அக்கறையாக இருத்தலைப் போல, ஒரு சபைக்குழுமத்தின் "இருதயத்தை" பெலப்படுத்தும் விஷயம் வேறு எதுவும் இல்லை.*

*15ம் வசனத்தில் உள்ள, "நீங்கள் மாத்திரம்" என்ற வார்த்தைகளை நாம் மீண்டும் ஒருமுறை கண்ணோக்குவோம். பிலிப்பியர்கள் தாங்கள் செய்ததை, மற்றவர்கள் என்ன செய்தனர் (அல்லது செய்யவில்லை) என்பதன் அடிப்படையில் செய்யவில்லை. அவர்கள் பவுலை நேசித்தனர் மற்றும் - வேறு எவரும் உதவினாலும் உதவாவிட்டாலும் - அவர்கள் அவருக்கு உதவத் தீர்மானித்தனர்.*

*இது, "எல்லாம் எனக்குக் கிடைத்தது, பரிபூரணமும் உண்டாயிருக்கிறது; உங்களால் அனுப்பப்பட்டவைகளைச் சுகந்த வாசனையும் தேவனுக்குப் பிரியமான உகந்த பலியுமாக எப்பாப்பிரோதீத்துவின் கையில் வரப்பற்றிக் கொண்டபடியினால் நான் திருப்தியடைந்திருக்கிறேன்" (வசனம் 18)*

என்பதை வாசிப்பது, இந்த சகோதரர்களுக்கு மாபெரும் திருப்தியைக் கொடுத்திருக்க வேண்டும். "உங்களால் அனுப்பப்பட்டவைகளை" என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ள (கிரேக்க வார்த்தைகள், NASB வேதாகமத்தின் சில பதிப்புகளில் குறிப்பிடப்பட்டபடி) "உங்களிடம் இருந்து வந்த பொருட்கள்" என்று நேரடியாக அர்த்தப்படுகிறது. நிதிகளுடன் கூடுதலாக அவர்கள் உடைகளையும் மற்ற பொருட்களையும் அனுப்பியிருக்கலாம். அவர்கள் எதை அனுப்பியிருந்தாலும், செயல்விளைவில் பவுல் "எனது தற்போதய தேவைகளுக்கு நான் போதுமானவற்றை - மற்றும் அதிகமானவற்றை - கொண்டிருக்கிறேன். எதிர்காலத் தேவைகளைச் சந்திக்கக்கூட என்னிடத்தில் சில பொருட்கள் எஞ்சியிருக்கின்றன" என்று கூறினார். மற்றவர்களுக்கு நீங்கள் உதவியிருக்கிறீர்கள் என்று நீங்கள் அறிதல் என்பது கொடுத்தலின் ஆசீர்வாதங்களில் ஒன்றாக உள்ளது!

## கட்டி எழுப்பப்பட்ட பரலோக "கணக்கு" (4:17, 18அ)

கடந்த காலத்தில் பிலிப்பியர்களின் கொடைகளைப் பற்றிக் குறிப்பிட்ட நிலையில் பவுல், கூடுதல் கொடைகளுக்காகத் தாம் குறிப்புக் காண்பிக்கவில்லை என்பதை மீண்டும் வலியுறுத்த வேண்டும் என்று நினைத்தார்: "உபகாரத்தை நான் நாடாமல், உங்கள் கணக்குக்குப் பலன் பெருகும்படியே நாடுகிறேன்" (வசனம் 17). கொடுத்தலுக்கான கிறிஸ்தவ நோக்கத்தைத் தொகுத்துரைக்கும் ஒரு வசனம் இருக்கிறது என்றால், அது இந்த வசனம்தான். எல்லாக் கிறிஸ்தவர்களுக்கும் தேவன், ஏவுதல் பெற்ற தமது எழுத்தாளர்கள் மூலமாக, கொடுக்கும்படி கட்டளையிடுகிறார் (காண்க 1 கொரிந்தியர் 16:1, 2). இது, அவருக்கு ஏதோ தேவைப்படுவதால் அல்ல (காண்க நடபடிகள் 17:25), ஆனால் நமக்குத் தேவைகள் இருப்பதாலேயே அவர் இவ்வாறு கட்டளையிடுகிறார். கொடுத்தல் என்பது *நமக்குச்* செய்யும் நன்மைகளின் நிமித்தமாகவே நாம் கொடுக்க வேண்டும் என்று அவர் விரும்புகிறார். பிலிப்பியர் 4:17ல் பவுலின் வார்த்தைகளுக்கு, வேதாகமத்தில் பின்வரும் பொழிப்புரை உள்ளது: "ஆனால் நான் உங்கள் கொடைகளைப் பாராட்டினாலும், உங்கள் தயவான குணத்தினால் நீங்கள் பெறவிருக்கும் நன்கு ஈட்டப்பட்ட வெகுமதியே என்னை வெகுமகிழ்ச்சிக்கு உள்ளாக்குகிறது" (என்னால் வலியுறுத்தப்படுகிறது).

NASB 17ம் வசனத்தில் "profit" "பலன்" என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ள கிரேக்க வார்த்தை "கனி" என்பதற்குரிய வார்த்தையாகும். கணக்காளர்கள் ஒரு கணக்கின் மீதான வட்டியைக் குறிப்பதற்கு இந்தச் சொற்றொடரை வசனம் 17ல் பயன்படுத்துகின்றனர். REB வேதாகமத்தில், "உங்கள் கணக்கின் மீது உயர்ந்துள்ள வட்டி" என்றுள்ளது. ஒரு சிறு வட்டிவிகிதத்தைத் தரும் உள்ளூர் வங்கி ஒன்றில் எனக்கு ஒரு கணக்கு உள்ளது. ஒவ்வொரு நாளும் கணக்கில் உள்ள இருப்புத்தொகை ஒரு சில சென்ட்டுகள் (பைசாக்கள்) அதிகரிக்கும். பிலிப்பியர்கள் பவுலுக்கு உதவி செய்கையில், அவர்கள் "பரலோகத்திலே பொக்கிஷங்களைச் சேர்த்துவைத்துக் கொண்டிருந்தனர்" (மத்தேயு 6:20; காண்க 1 தீமோத்தேயு 6:17-19). அவர்களின் ஆவிக்குரிய "வங்கிக்கணக்கு" "வட்டியை" ஈட்டிக்கொண்டிருந்தது என்று பவுல் அவர்களுக்குக் கூறினார். அவர் இங்கு ஒரு நிகழ்கால வினைச்சொல்லைப் பயன்படுத்தினார், இது எனது வங்கிக் கணக்கு அன்றாடம் வட்டியை ஈட்டுவது போன்றே, அவர்களின் பரலோக "கணக்கும்"

தொடர்ந்து "வட்டியை" ஆதாயப்படுத்திக் கொண்டிருக்கிறது என்று சுட்டிக் காண்பித்தார்.

இது ஆங்கில மொழிபெயர்ப்பில் எப்பொழுதுமே தெளிவாக இருப்பதில்லை, ஆனால் பவுல் தமது "உங்களுக்கு நன்றி" குறிப்பு முழுவதிலும் வணிக மொழியையே பயன்படுத்தினார்:

- 15ம் வசனத்தில் அவர், "நீங்கள்மாத்திரம் எனக்கு உடன்பட்டதேயல்லாமல், வேறொரு சபையும் உடன்படவில்லை" என்று கூறினார். "உடன்பட்டது" என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ள கிரேக்க வார்த்தை "கூட்டாளித்துவத்தைக் கொண்டிருத்தல்" என்று மொழிபெயர்க்கப்படமுடியும்.[3] பிலிப்பியர்கள் பவுலுடன் ஆவிக்குரிய "கூட்டாளிகள்" ஆகி இருந்தனர். ஆவொன் மலோன் என்பவர் 15ம் வசனத்தைப் பின்வருவது போன்று பொழிப்புரை செய்தார்: "வேறு எந்த சபையும் என்னுடன் சேர்ந்து தொழில் செய்யவில்லை ..."[4]
- கூட்டாளித்துவம் என்பது கண்டிப்பான கணக்கு எழுதும் முறையைக் கோருகிறது. இவ்வாறாக, 15ம் வசனத்தில் பவுல், "கொடுக்கல் வாங்கல் காரியத்தை" குறிப்பிட்டார். ஜேக் முல்லர் என்பவரின் கூற்றுப்படி, இது "ஒரு வணிகச் சொற்றொடராக உள்ளது, மற்றும் இது செலவு மற்றும் வரவு ஆகியவற்றின் கணக்கைக் குறிக்கிறது."[5] TEV வேதாகமத்தில் "இலாபங்கள் மற்றும் நஷ்டங்கள்" என்றுள்ளது. அர்ன்டிட் மற்றும் கிங்ரிச் ஆகியோர் நிதிநிலைப் பேரேட்டுத் தாளின்மீதுள்ள வகையில், "பற்று மற்றும் வரவு" என்ற சொற்றொடரைப் பயன்படுத்தினர்.[6]
- "உங்கள் கணக்குக்குப் பலன் பெருகும்படியே" என்று கணக்கியல் சொற்றொடரில் பவுல் பேசியுள்ள 17ம் வசனத்தை நாம் கண்ணோக்கியுள்ளோம். CJB வேதாகமத்தில், "உங்கள் கணக்கில் வரவு இருப்பை அதிகரிக்கும் விஷயத்தை நான் கண்ணோக்குகிறேன்" என்றுள்ளது.

18ம் வசனத்தில் முதல் பகுதியில் பவுல், "எல்லாம் எனக்குக் கிடைத்தது, பரிபூரணமும் உண்டாயிருக்கிறது" என்று கூறியபோது, அவரது வணிகவியல் மொழிப்பயன்பாடு உச்சப்படுத்தப்பட்டுள்ளது. "எல்லாம் எனக்குக் கிடைத்தது" என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ள (*apecho panta* என்ற) கிரேக்கச் சொற்றொடர், "ஒரு இரசீதைப் பெறுவதில் பயன்படுத்தப்பட்ட நுட்பச் சொல்விளக்கமாக" இருந்தது.[7] இவ்வார்த்தைகள், "முதல் நூற்றாண்டுக் காலத்தில், இரசீதுகளில் அவற்றிற்குரிய தொகை 'முழுமையும் செலுத்தப்பட்டது' என்று சுட்டிக்காண்பிப்பதற்கு அவற்றின் மீது எழுதப்பட்டு" இருந்தன.[8] இவ்வாறாக NRSV வேதாகமத்தில், "எனக்கு முழுமையும் செலுத்தப்பட்டது" என்று இருக்கையில், TEV வேதாகமத்தில், "நீங்கள் எனக்குக் கொடுத்த எல்லாவற்றிற்கும் எனது இரசீது ... இதோ இங்குள்ளது" என்றுள்ளது. "நீங்கள் எனக்குப் பட்டிருந்த எல்லாக் கடனும் செலுத்தப்பட்டு உள்ளது - எனவே இன்னும் அதிகமாக எதுவும் அனுப்பத் தேவையில்லை" என்பது முடிவுவிளைவாக உள்ளது.

கணக்கியல் சொற்றொடரைப் பயன்படுத்தியதால் பவுல், பிலிப்பியர்களின் கொடையை ஒரு உலகப்பிரகாரமான நிதிநிலைப் பரிமாற்றமாகக்

குறைத்துப்போட முயற்சிசெய்தாரா? இல்லை, அவர் இன்றைய நாட்களில் கூட சிலர் செய்வது போலவே, பேச்சின் உருவகங்களைப் பயன்படுத்துவதை மகிழ்வுடன் அனுபவித்தார். அப்போஸ்தலரின் சித்திரத்துவமான மொழிநடை, பிலிப்பியர்களின் நற்செயலைத் தேவன் "பதிவு" செய்திருந்தார் மற்றும் அதை மறக்க மாட்டார் என்று அவர்களுக்கு உறுதியளிக்கும் ஒரு வழியாக மாத்திரம் இருந்தது (காண்க எபிரேயர் 6:10). தேவன் அவர்களுக்கு வெகுமதியளிக்கத் தவற மாட்டார் (1 கொரிந்தியர் 3:8ஆ) - மற்றும் அந்த வெகுமதியானது அவர்கள் செய்திருந்தவற்றை மிஞ்சி நிற்கும்!

நாம் தேவனுடைய ஊழியத்திற்காகக் கொடுக்கும்போது, நாமும் இதே வகையான உறுதிப்பாட்டைக் கொண்டிருக்க முடியும். அது கொடுத்தலின் ஆசீர்வாதங்களில் ஒன்றாக உள்ளது!

## கர்த்தருக்கு "பலி"! (4:18ஆ)

கொடுத்தல் என்ற பாடக்கருத்து கணக்குப் பேரேட்டுத் தாள்களுக்கு மாத்திரம் ஒதுக்கப் பட்டது என்று எவரொருவரும் நினைக்கும்படி பவுல் விரும்பமாட்டார். அவர் விரைவிலேயே வங்கிரீதியான வார்த்தை அமைப்பில் இருந்து ஆசாரியத்துவச் சொல்லாக்கத்திற்குக் கடந்து சென்றார்: "உங்களால் அனுப்பப்பட்டவைகளைச் சுகந்த வாசனையும் தேவனுக்குப் பிரியமான உகந்த பலியுமாக எப்பாப்பிரோதீத்துவின் கையில் வரப்பற்றிக் கொண்டபடியினால் நான் திருப்தியடைந்திருக்கிறேன்" (வசனம் 18ஆ).

இவ்விடத்தில் கூறப்படும் உருவகம், கர்த்தருக்குச் செலுத்தப்பட்ட பலிகள் மற்றும் காணிக்கைகள் பற்றிய பழைய ஏற்பாட்டுக் குறிப்புகளில் இருந்து எடுக்கப்பட்டுள்ளது. எடுத்துக்காட்டாக, தகனபலிகளின் புகையானது தேவனுக்குப் பிரியமான சுகந்த வாசனையாக எழும்புவதாகக் கூறப்பட்டிருந்தது (ஆதியாகமம் 8:21; லேவியராகமம் 1:9, 13, 17). உங்களை மகிழ்விக்கும் வாசனைகளைப் பற்றி நினைத்துப் பார்க்கச் சற்று நேரம் எடுத்துக் கொள்ளுங்கள். நீங்கள் ஒரு வாசமுள்ள மலரை நினைக்கலாம் ... அல்லது உங்கள் மனைவி பயன்படுத்தும் நறுமணப் பொருளை நினைக்கலாம் ... அல்லது குளித்து முடித்த குழந்தை ஒன்றின் இனிய மணத்தை நினைக்கலாம். இப்போது பின்வருவதைப் பற்றி ஆழ்ந்து சிந்தியுங்கள்: நீங்கள் தேவனுடைய ஊழியத்திற்குக் கொடுக்கும் வேளையைக் காட்டிலும் வேறு எதுவும் தேவனுக்கு மேன்மையான "வாசனையாக" இருப்பதில்லை - வேறு எதுவும் அவருக்கு அவ்வளவு சுகந்த வாசனையைத் தருவதில்லை!

பவுல், "தேவனுக்குப் பிரியமான உகந்த பலியுமாக" என்ற சொற்றொடரைப் பயன்படுத்தினார். எல்லாக் கிறிஸ்தவர்களும் ஆசாரியர்களாகவும் கர்த்தருக்குப் பலிகளைச் செலுத்த வேண்டியவர்களாகவும் இருக்கின்றனர் (1 பேதுரு 2:5, 9). பழைய ஏற்பாட்டின்கீழ் மக்கள் பாவத்திற்காக பலிகளையும் (காண்க லேவியராகமம் 4:2, 3), நன்றி செலுத்துதல் மற்றும் துதி ஆகியவற்றை வெளிப்படுத்தும் பலிகளையும் (காண்க லேவியராகமம் 7:11, 12) செலுத்தினர். நாம் பாவத்திற்காகப் பலி செலுத்த இயலாது; அதை இயேசு சிலுவையில் செலுத்திவிட்டார் (எபிரெயர் 9:26; காண்க எபேசியர் 5:2). இருப்பினும் நாம் நம்மையே - நம்முடைய இருப்பு மற்றும் நமது செய்கை யாவற்றையும் - நன்றி செலுத்துதல் மற்றும் துதி ஆகியவற்றின் பலியாகச் செலுத்த முடியும் (ரோமர்

*12:1; எபிரெயர் 13:15, 16; காண்க பிலிப்பியர் 2:17). அதைச் செய்வதற்கு, கிறிஸ்துவின் ஊழியத்திற்காகத் தாராளமாகக் கொடுத்தல் என்பது ஒரு வழிவகையாக உள்ளது (பிலிப்பியர் 4:18).*

*18ம் வசனத்தில் பவுல், பிலிப்பியர்களுக்கு மாபெரும் பாராட்டுரை ஒன்றை அளித்தார். மிகச்சிறந்த பலிகளை மாத்திரமே மக்கள் அளிக்க வேண்டியதாக இருந்தது. அப்போது மட்டுமே அவைகள் ஏற்றுக்கொள்ளப்பட்டன; அப்போது மட்டுமே அவைகள் தேவனுக்குப் பிரியமானவைகளாக இருந்தன (காண்க மல்கியா 1:6-8). இவ்வாறாக அப்போஸ்தலர் பிலிப்பியர்களுக்கு, அவர்களின் கொடை "தேவனுக்குப் பிரியமான உகந்த பலி"யாக இருந்தது என்று கூறியபோது, செயல்விளைவில் அவர், "நீங்கள் உங்களுடைய மிகச்சிறந்தவற்றை அனுப்பினீர்கள் என்று நான் அறிகிறேன்" என்றே கூறினார். நாமும்கூட நமது எஜமானருக்கு நம்மிடத்தில் உள்ளவற்றில் மிகச்சிறப்பானவற்றையே கொடுக்க வேண்டும்.*

*கொடுத்தலைப் பவுல் அதன் மிக உயர்ந்த மட்டத்திற்கு உயர்த்தினார். பிலிப்பியர்களின் கொடையானது முடிவில் தமக்குக் காட்டிலும் கர்த்தருக்கே மிக அதிகமானதாக இருக்கும் என்று அவர்கள் புரிந்துகொள்ள வேண்டும் என்று பவுல் விரும்பினார் (காண்க மத்தேயு 10:40-42; 25:31-40; நடபடிகள் 9:3-5). அவர் அதை உடனடியாகப் பெற்றுக்கொள்பவராக இருந்தார், ஆனால் பிதாவாகிய தேவனே அதை நிறைவில் பெற்றுக்கொள்பவராக இருந்தார். நமது கொடைகள் கர்த்தருக்கானவைகள் என்று அறிதல் கொடுத்தலின் ஆசீர்வாதங்களில் ஒன்றாக உள்ளது.*

## *எல்லாத் தேவையும் நிறைவேற்றப்பட்டது (4:19)*

*பிலிப்பியர்கள் பவுலின் தேவைகளைக் குறித்துப் பொறுப்பேற்றுக் கொண்டிருந்தனர். இப்போது அவர்களின் தேவைகளைக் குறித்துத் தேவன் பொறுப்பேற்றுக் கொள்ளுவார் என்பதை அவர்கள் அறிய வேண்டும் என்று அப்போஸ்தலர் விரும்பினார். 19ம் வசனமானது வேதாகமத்தில் உள்ள மாபெரும் ஆசீர்வாதங்களில் ஒன்றாக உள்ளது: "என் தேவன் தம்முடைய ஐசுவரியத்தின்படி உங்கள் குறைவையெல்லாம் கிறிஸ்து இயேசுவுக்குள் மகிமையிலே நிறைவாக்குவார்." டிவைட் பென்ட்டகாஸ்ட் என்பவர் இந்த வசனத்தை, "யுகங்களினூடே தேவனுடைய பிள்ளைகளின் பாதங்களின் அடியில் உள்ள பாறை" என்று அழைத்தார்.[9] இங்கு பவுல் ஒரு உண்மையையா அல்லது ஒரு விருப்பத்தையா, எதை வெளிப்படுத்தினார் என்பது பற்றிக் கேள்வி உள்ளது. கையெழுத்துப் பிரதி ஆதாரமானது உண்மை என்பதை ஆதரிக்கிறது[10] - "தேவன் நிறைவாக்குவார்" - மற்றும் இவ்வாறே இது* NASB *வேதாகமத்தில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது.*

*(ஆங்கில வேதாகமத்தில்) இவ்வசனம்* "and" *என்ற வார்த்தையுடன் தொடங்குகிறது. இது இவ்வசனத்தை இதற்கு முந்திய வசனத்துடன் பிணைக்கிறது: பிலிப்பியர்கள் பவுலுக்கு அளித்த தங்கள் கொடைகளில் தாராளகுணத்துடன் இருந்ததால், அவர்களைக் குறித்த பராமரிப்பில் தேவன் தாராளமாக இருப்பார். நாம், பிலிப்பியர்களின் சுயநலமற்ற கொடுத்தல் வழக்கங்களைக் கொண்டிருந்தால், நமது தேவைகளையும் தேவன் நிறைவேற்றுவார். "கொடுப்பதற்கு மூடிக்கொள்ளும் கை பெறுவதற்கு*

மூடிக்கொள்ளுகிறது, கொடுத்தலுக்குத் திறக்கும் கை பெறுவதற்குரிய நிலையிலும் இருக்கிறது."[11]

பின்பு "என் தேவன்" என்ற வார்த்தைகள் வருகின்றன. அந்தச் சொற்றொடரைப் பவுல் அரிதாகவே பயன்படுத்தினார். இது தனித்துவத் தொடுகை உள்ளதாகவும் தனிநபர் நம்பிக்கை வைத்தலின் வெளிப்பாடாகவும் உள்ளது. செயல்விளைவில் பவுல், "*என்* தேவன் *உங்கள்* தேவைகளை நிறைவாக்குவார்" என்று கூறினார்.

தேவன் என்ன செய்வார்? "தேவன் உங்கள் குறைவையெல்லாம் நிறைவாக்குவார்." இது நாம் விரும்புகிற எதையும் மற்றும் எல்லாவற்றையும் தேவன் நமக்குத் தருவார் என்று அர்த்தப்படுகிறதா? இல்லை. யாரோ ஒருவர், தேவன் நமது "பேராசைகளையல்ல" ஆனால் நமது "தேவைகளையே" நிறைவேற்றுகிறார் என்று கூறினார். நமக்கு உண்மையிலேயே தேவையானவற்றை, நமக்கு நன்மையானவற்றைக் கர்த்தர் நமக்கு தருகிறார். ஏர்ல் பால்பர் என்பவர், "நமது தேவைகள், நாம் எவ்வாறு இருக்க வேண்டும் அல்லது நாம் என்ன செய்ய வேண்டும் என்று விரும்புகிறோமோ அதன்படியின்றி, நாம் யாராக வேண்டும் என்று தேவன் விரும்புகிறாரோ, அந்த விருப்பத்தினால் விளக்கப்படுகின்றன" என்று எழுதினார்.[12]

நாம் பல விருப்பங்களைக் கொண்டுள்ளோம், ஆனால் சார்பளவில் ஒரு சில அடிப்படைத் தேவைகளையே கொண்டுள்ளோம். மனோதத்துவ நிபுணர்களும் ஆலோசனை வழிகாட்டுநர்களும் மனிதகுலத்தின் அடிப்படைத் தேவைகளைப் பல்வேறு வழிகளில் விளக்கப் படுத்துகின்றனர், ஆனால் பின்வரும் பட்டியலானது நமது நோக்கத்திற்குப் பயனுள்ளதாக இருக்கும்:[13]

- உடல்ரீதியான தேவைகள் - உணவு, உடை, இருப்பினும் மற்றும் வாழ்வின் பிற அத்தியாவசியமான தேவை.
- உடல்ரீதியான பாதுகாப்பு - உடல்ரீதியான தேவைகள் எதிர்காலத்தில் சந்திக்கப்படும் என்ற உறுதிப்பாடு.
- உணர்வுப் பூர்வமான பாதுகாப்பு - ஏற்றுக்கொள்ளப்படுவதாக உணருதலுக்கான தேவை.
- வாழ்வில் ஒரு நோக்கம் - தேவைப்படுகிறோம் என்று உணரப்படுதலின் தேவை.
- ஒருவரின் செயலாற்றலை மேம்படுத்துதல் - வளருவதற்கான தேவை.

இந்தத் தேவைகள் யாவற்றையும் தேவன் அளிக்கிறார் என்பதை உணர்ந்தறிதல் ஆச்சரியமானதாக உள்ளது.

- உடல்ரீதியான தேவைகள் - தேவனுடைய சித்தத்தை நாம் செய்தால் வாழ்வின் தேவைகளை அருளுவதாகத் தேவன் நமக்கு வாக்குத்தத்தம் செய்துள்ளார் (மத்தேயு 6:33).
- உடல்ரீதியான பாதுகாப்பு - எதிர்காலத்தில் தேவன் நம்மைப் பராம ரிப்பதாக வாக்குத்தத்தம் செய்திருக்கிறார் (மத்தேயு 6:34; காண்க பிலிப்பியர் 4:6).
- உணர்வுப் பூர்வமான பாதுகாப்பு - தேவன் தமது நிபந்தனையற்ற

அன்பை நமக்கு விரிவாக்கியுள்ளார் (காண்க ரோமர் 5:8; 8:35, 39).

- வாழ்வில் ஒரு நோக்கம் - கிறிஸ்தவராக இருத்தல் என்பது வாழ்வதற்கான ஒரு நோக்கத்தை நமக்குக் கொடுக்கிறது (காண்க பிலிப்பியர் 1:21; எபேசியர் 2:10).
- ஒருவரின் செயலாற்றலை மேம்படுத்துவதற்கான வாய்ப்பு - கிறிஸ்துவுக்குள் நாம் பக்குவம் அடைந்தவர்களாக முடியும் (காண்க எபேசியர் 4:15; கொலோசெயர் 1:28).

நமக்கான தேவனுடைய அளித்தலில் இருதயம் போன்ற மையப்பகுதியாக இருப்பவர், அவரது குமாரனும் இரட்சிப்பின் வாக்குத்தத்தமும் ஆகும். இதை மலோன் என்பவர், "மன்னிப்பு, சமாதானம் மற்றும் ஆவிக்குரிய வல்லமை ஆகியவை மாபெரும் இருதய வேட்கைகள்" என்று குறிப்பிட்டார்.[14] தேவன் இவை எல்லாவற்றையும் தருகிறார்! மேலும் அவரது ஆவிக்குரிய அளிப்பானது மற்ற எல்லாப் பகுதிகளிலும் அவரது அளிப்பிற்கு உத்தரவாதமாக உள்ளது: "தம்முடைய சொந்தக்குமாரனென்றும் பாராமல் நம்மெல்லாருக்காகவும் அவரை ஒப்புக்கொடுத்தவர், அவரோடேகூட மற்ற எல்லாவற்றையும் நமக்கு அருளாதிருப்பதெப்படி?" (ரோமர் 8:32). பென்ட்டகாஸ்ட் என்பவர் இவ்வசனத்திற்குப் பின்வருமாறு விளக்கம் கொடுத்தார்:

> நான் ஒரு நேர்த்தியான நகைக் கடைக்குச் சென்று அவர்களின் தொகுப்பில் இருந்து ஒரு மிக நேர்த்தியான வைரத்தை வாங்க வேண்டியிருந்தால், அதைச் சுற்றிக் கொண்டுவர ஒரு காகிதத்துண்டை நான் கேட்பதை அவர்கள் பொருட்படுத்த மாட்டார்கள் என்பது உறுதி. நமது ஆவிக்குரிய தேவைகளைச் சந்திக்கும்படிக்கு, வளமான உடைமையாகிய தமது பரலோக ஆசீர்வாதங்களை நமக்கு அருளியிருக்கிற தேவன், நமது உலகப்பிரகாரமான தேவைகளைச் சந்தித்தலைப் பெரிய விஷயமாகக் கருதமாட்டார்.[15]

தேவன் உலகப்பிரகாரமான மற்றும் ஆவிக்குரிய தேவைகள் இரண்டையும் நமக்கு அளிக்கிறார் என்பதால், நாம் நமது வேலைகளை விட்டுவிட்டு, நாம் சொந்தம் கொண்டுள்ள யாவற்றையும் (பிறருக்கு) கொடுத்துவிட்டு, "அவர்மீது மாத்திரமே சார்ந்திருக்க" வேண்டுமா? இல்லை. நமது வேலைகள் மற்றும் உடைமைகள் ஆகியவை கர்த்தர் நமக்கு அளித்திருப்பவற்றின் பாகமாக உள்ளன (காண்க யாக்கோபு 1:17). "தேவன் உங்களுக்கு கொடுத்திருப்பவற்றை நீங்கள் ஊதாரித்தனமாக இறைத்துவிட்டு ... உங்கள் தேவையைச் சந்திப்பதில் அவர் தலையிட வேண்டும் என்று நினைப்பது மதியீனமாக உள்ளது."[16] நாம் வேலை செய்ய வேண்டும் என்றும் (2 தெசலோனிக்கேயர் 3:10) மற்றும் நமக்கும் பிறருக்கும் நம்மால் முடிந்ததை அளித்துக்கொள்ள வேண்டும் (எபேசியர் 4:28; 1 தீமோத்தேயு 5:8) என்றும் தேவன் நம்மிடத்தில் எதிர்பார்க்கிறார். அதே வேளையில் தேவன் நம்மைக் கவனித்துக் கொண்டு இருக்கிறார் என்று உணர்ந்தறிதல் ஆச்சரியமானதாக இருப்பதில்லையா? நமக்குத் தேவையானவற்றை நாம் பெற்றுக்கொள்வதை அவர் நிச்சயப்படுத்துவார்!

அது ஒரு கேள்வியைக் கொண்டு வருகிறது: நமது தேவைகளுக்குத் தேவன் *எவ்வாறு* கொடுத்து உதவுகிறார்? (ஏற்கனவே) குறிப்பிட்டபடி,

நாம் வேலைசெய்யத் திறமைகளையும் வாய்ப்புகளையும் அவர் நமக்குக் கொடுக்கிறார். மற்ற வழிமுறைகளும் குறிப்பிடப்பட முடியும்; உதாரணமாக, அவர் பிற மக்களின் மூலமாகப் பவுலின் தேவைகளுக்குக் கொடுத்து உதவினார் (பிலிப்பியர் 4:18), மற்றும் அவர் நமக்கும் அதையே செய்யலாம். மீண்டுமாக அவர், தமது தொடர்ந்த பராமரிப்பை நமக்கு வாக்குத்தத்தம் செய்திருக்கிறார் (ரோமர் 8:28). அப்படியென்றால், எப்போதும் எப்போதுமே அவர் தமது தனிப்பட்ட அன்பினாலும் அக்கறையினாலும் நமது ஆவிக்குரிய தேவைகளுக்கு கொடுத்து உதவுகிறார் (ரோமர் 8:39). தேவன் நம்மை எவ்வாறு பராமரிக்கிறார் என்பதல்ல, ஆனால் அவர் அதைச் செய்வார் என்று விசுவாசிப்பதே - அவர் மீது நம்பிக்கை வைக்கக் கற்றுக்கொள்வதே - முக்கியமாக உள்ளது.

நமது எல்லாத் தேவைகளுக்கும் கொடுத்து உதவ தேவனால் உண்மையிலேயே முடியுமா? 19ம் வசனம் "தம்முடைய ஐசுவரியத்தின்படி ... மகிமையிலே" என்ற சொற்றொடருடன் தொடருகிறது. "மகிமையிலே" என்பது "நிறைவாக்குவார்" என்ற வினைச்சொல்லை ("மகிமையாக") மாற்றியமைக்கிறதா அல்லது "ஐசுவரியம்" என்ற பெயர்ச்சொல்லை ("மகிமையான ஐசுவரியம்") மாற்றியமைக்கிறதா அல்லது அது பரலோகத்தைக் குறிக்க பயன்படுத்தப்பட்டுள்ளதா ("மகிமையின்" இடம்) என்று விளக்கவுரையாளர்கள் விவாதிக்கின்றனர். இருப்பினும் எல்லாரும், இவ்வசனப்பகுதி தேவனுடைய ஆதாரவளங்கள் மகிமையானவை - ஏனென்றால் அவைகள் அள்ள அள்ளக் குறையாதவை - என்று ஒப்புக்கொள்கின்றனர்.

> தேவன் தமது எண்ணற்ற எண்ணிக்கையிலான பிள்ளைகளின் திரளான தேவைகளைச் சந்திக்க முடியும், ஏனெனில் அவர் தமது மகிமையுள்ள ஐசுவரியத்தில் முடிவற்று இருக்கிறார். வரையறைக்கு உட்பட்ட நிதிகளைக் கொண்டுள்ள ஒரு மனிதர், வெவ்வேறு காரணங்களுக்கு அதைக் கொடுக்கையில், அந்த நிதி குறைந்து போவதைக் காண்பார்; ஆனால் ஒரு மனிதர் அளவற்ற நிதிகளைக் கொண்டிருந்தால், அவர் எல் லை யின்றிக்கொடுக்க முடியும், கொடுப்பதற்கான அவரது இருப்புகளில் குறைவே ஏற்படாது. தேவன் மகிமையில் எல்லையற்று இருப்பதால், எல்லை யற்ற எண்ணிக்கையிலான தேவைகளுக்கு அவர் கொடுக்க முடிவதுடன் இன்னும் அவரிடத்தில் எல்லையற்ற வளங்கள் நிறைந்து இருக்கும்.[17]

ஆகவே தேவன், "நாம் வேண்டிக்கொள்ளுகிறதற்கும் நினைக்கிறதற்கும் மிகவும் அதிகமாய் நமக்குள்ளே கிரியைசெய்கிற வல்லமையின்படியே, நமக்குச் செய்ய வல்லவராக" இருக்கிறார் (எபேசியர் 3:20)! வார்ரென் வயர்ஸ்ப் என்பவர் பின்வருமாறு குறிப்பிட்டார்:

> பிலிப்பியர் 4:18 மற்றும் 19 ஆகிய வசனங்களுக்கு இடையில் ஆர்வத்தைத் தூண்டும் ஒரு வேறுபாடு உள்ளது. பவுலின் உரையைப் பொழிப்புரை செய்வதென்றால் நாம் இதைப் பின்வருமாறு உரைக்கலாம்: "நீங்கள் *என்* தேவையைச் சந்தித்தீர்கள், தேவன் *உங்கள்* தேவைகளைச் சந்திக்கப் போகிறார். நீங்கள், நான் கொண்டுள்ள *ஒரு* தேவையைச் சந்தித்தீர்கள், ஆனால் எனது தேவன் உங்கள் *எல்லாத்* தேவைகளையும் சந்திப்பார். நீங்கள் உங்கள் *ஏழ்மையில்* இருந்து கொடுத்தீர்கள், ஆனால் தேவன்

*மகிமையுள்ள தமது ஐசுவரியத்தில் இருந்து உங்கள் தேவைகளுக்குக் கொடுத்து உதவுவார்!"*[18]

மாபெரும் இவ்வசனப் பகுதியை நாம் முழுமையாகப் பார்த்து முடிக்கவில்லை. இவ்வசனத்தின் முடிவுப் பகுதியில் உள்ள பின்வரும் திறவுகோல் வார்த்தைகளை நாம் தவறவிடக்கூடாது: "கிறிஸ்து இயேசுவுக்குள்." 4:19 ன் மாட்சிமை மிகுந்த வாக்குத்தத்தம் "கிறிஸ்து இயேசுவுக்குள்" நிறைவேறுகிறது மற்றும் "கிறிஸ்து இயேசுவுக்குள்" இருப்பவர்களுக்கு மாத்திரமே உரித்தானது: இவர்கள், அவருக்குள் ஞானஸ்நானம் பெற்று அவருக்குள் வாழ்கிறவர்கள் ஆவர் (ரோமர் 6:3, 4; கலாத்தியர் 3:26, 27; கொலோசெயர் 2:6). பென்ட்டகாஸ்ட் என்பவர் இதன் மீது நேரத்திற்கு ஏற்ற பின்வரும் விளக்கத்தைக் கொடுத்தார்:

> *வாக்குத்தத்தம் ... கீழ்ப்படிதலை முன் அனுமானிக்கிறது. தேவனுக்குக் கீழ்ப்படிதலைத் தராமல் வாக்குத்தத்ததின் நிறைவேற்றத்தை உரிமை கோருதல் என்பது தவறான யூகமாகும். இது விசுவாசக் குறைவைக் காண்பிக்கிறது ...*
>
> *... திரளான மக்கள் கூட்டத்திற்கு நமது கர்த்தர், "எனது பிதா, பறவைகள் மற்றும் புல் ஆகியவற்றைக் கூடப் பராமரிக்கிறார், ஆனால் தேவனுடைய இராஜ்யத்தை* முதலில் *தேடுங்கள், அப்போது இவைகள் எல்லாம் உங்களுக்குக் கூடக்கொடுக்கப்படும்" என்று கூறினார்.*
>
> *இயேசுகிறிஸ்து நமது வாழ்வில் தமது சரியான இடத்தில் இல்லை என்றால், மற்றும் நாம் தேவனுடைய சித்தத்துடன் சரியான வகையில் தொடர்புபடாதிருந்தால், "(நமது) தேவன் ... (நமது) குறைவையெல்லாம் ... நிறைவாக்குவார்" என்று கூறுவது தவறான யூகமாக இருக்கும்.*[19]

இருப்பினும், அவருடைய சித்தத்தைச் செய்வதற்கு - நாம் கொடுக்க வேண்டிய பிரகாரம் கொடுத்தல் உட்பட நாம் நம்மை ஒப்புக்கொடுத்திருந்தால் அவர் நமது ஒவ்வொரு தேவையையும் நிறைவாக்குவதாக வாக்குத்தத்தம் கொடுத்திருக்கிறார். அது கொடுத்தலின் மாபெரும் ஆசீர்வாதங்களில் ஒன்றாக உள்ளது.

## தேவன் மகிமைப்படுதல் (4:20)

பவுல், 4:19ன் உச்சபட்சச் சிந்தனையை அடைகையில், அவர் தமது துதியை வெளிப்படுத்தாமல் இருக்கக் கூடாதிருந்தார்: "நம்முடைய பிதாவாகிய தேவனானவருக்கு என்றென்றைக்கும் மகிமை உண்டாவதாக" (4:20அ). பவுல் "என் தேவன்" என்று பேசியிருந்தார்; இப்போது அவர் தம் வாசகர்களுடன் தம்மை அடையாளப்படுத்திக் கொள்கிறார்: "*நம்முடைய* தேவன்." *அவர்களின்* தேவன் அவர்களுக்கு "மகிமையில் ஐசுவரியங்களை" கொடுத்திருந்தார் (வசனம் 19); எனவே அதற்குப் பதிலாக அவர் மகிமையைப் பெறவேண்டும்.

"என்றென்றைக்கும்" என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ள சொற்றொடரானது மூலமொழியில், "காலங்காலமாக" என்று நேரடியாக அர்த்தப்படுகிறது. நித்தியத்துவம் என்பது யுகத்திற்குப் பின் யுகமாக, மனிதப் புரிந்துகொள்ளுதலுக்கு அப்பால் முடிவில்லாத வகையில் நீண்டுள்ளது என்பதே நித்தியத்தைப் பற்றி

அந்த நாட்களில் இருந்த மனிதர்கள் புரிந்துணரக் கூடிய ஒரே வழியாக இருந்தது. தேவன் *என்றென்றைக்கும்* மகிமைப்பட வேண்டியவராக இருக்கிறார். இதை நாம் செய்வதற்கு, நாம் கொடுக்க வேண்டிய பிரகாரம் கொடுத்தல் என்பது ஒரு வழியாக உள்ளது. நாம் தேவனை மகிமைப்படுத்துகிறோம் என்று அறிதலானது கொடுத்தலின் ஆசீர்வாதங்களில் ஒன்றாக உள்ளது.

20ம் வசனம் "ஆமென்" என்ற வார்த்தையுடன் முடிகிறது: "அப்படியே ஆகட்டும்" அல்லது "இது உண்மையாக உள்ளது." பவுல் எழுதியிருந்தது நிச்சயமானதும் கேள்விகேட்க இயலாததுமாக இருந்தது என்பதில் சந்தேகம் இல்லை! "நம்முடைய பிதாவாகிய தேவனானவருக்கு என்றென்றைக்கும் மகிமை உண்டாவதாக. *ஆமென்.*"

## முடிவுரை

நாம், கர்த்தர் நமக்குக் கட்டளையிட்டபடி கொடுக்கும்போது நம்முடையவைகளாகிற ஆசீர்வாதங்கள் சிலவற்றைப் பட்டியலிட்டோம். பிலிப்பியர்கள் இந்த ஆசீர்வாதங்களை பெறுவதற்காகவே கொடுத்தார்களா? அநேகமாக இல்லை என்றே கூறலாம். அவர்கள் பவுலை நேசித்தார்கள், அவ்வளவே. அவர் எங்கிருந்தார் என்றும் அவரது தேவைகள் என்ன என்றும் அவர்கள் கண்டறிந்தபோது, அவர்கள் அவருக்கு உதவியை அனுப்பினார்கள். அவர்கள் தங்களின் தாராளதன்மையினால் விளைந்த பல பயன்களை அறிந்த போது வியப்பு அடைந்திருக்க சாத்தியம் உள்ளது;

- அவர்கள், பகிர்ந்து கொள்ளுதலில் மூலமாக வருகிற ஆசீர்வாதத்தை கொண்டிருந்தனர்.
- அவர்கள், இன்னொருவருக்கு உதவி செய்தலில் மனநிறைவை அறிந்தனர்.
- அவர்கள், தங்கள் பரலோக "கணக்கில்" நிதிகளைக் கூடுதலாக்கினர்.
- அவர்கள் கொடையானது கர்த்தருக்கு பிரியமான "பலியாக" இருந்தது.
- அவர்கள், தங்கள் தேவைகளை தேவன் நிறைவாக்குவார் என்ற வாக்குத்தத்தத்தைப் பெற்றிருந்தனர்.
- இதன் விளைவாகத் தேவன் மகிமைப்படுத்தப்பட்டார்.

பின்வருவதை ஒருக்காலும் சந்தேகப் படாதீர்கள்: தாராளமாக கொடுத்தல் என்பது பிலிப்பியர்களுக்கு என்ன செய்ததோ அதையே அது உங்களுக்கும் செய்யும்! கொடுங்கள் அப்பொழுது உங்களுக்கும் கொடுக்கப்படும்: அமுக்கிக் குலுக்கி சரிந்து விழும்படி நன்றாய் அளந்து உங்கள் மடியிலே போடுவார்கள்: நீங்கள் எந்த அளவினால் அளக்கிறீர்களோ அந்த அளவினால் உங்களுக்கும் அளக்கப்படும் (லூக்கா 6:38).

இருப்பினும் முதலில் நீங்கள் உங்களையே கர்த்தருக்கென்று கொடுக்கவேண்டும் (காண்க 2 கொரிந்தியர் 8:5ஆ). இந்த ஆசீர்வாதங்கள் யாவையும் "கிறிஸ்துவுக்குள்" இருப்பவர்களுக்கு மாத்திரமே என்பதை நினைவில் வையுங்கள். நீங்கள் ஒரு மனம்வருந்திய விசுவாசி என்ற வகையில் இயேசுவுக்குள் ஞானஸ்தானம் பெறாதிருந்தால் (மாற்கு 16:16; நடபடிகள் 2:38; கலாத்தியர் 3:26, 27), அதை இன்றே செய்யுங்கள்.

குறிப்புகள்

[1]W. E. Vine, *The Expanded Vine's Expository Dictionary of New Testament Words,* ed. John R. Kohlenberger III (Minneapolis: Bethany House Publishers, 1984), 30-31. [2]Ibid., 494. [3]Alfred Marshall, *The Interlinear Greek-English New Testament* (London: Samuel Bagster & Sons Ltd., 1958), 788. [4]Avon Malone, *Press to the Prize* (Nashville: 20th Century Christian, 1991), 121. [5]Jac J. Muller, *The Epistles of Paul to the Philippians and to Philemon,* The New International Commentary on the New Testament, ed. F. F. Bruce (Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publi shing Co., 1955), 149. [6]Walter Bauer, *A Greek-English Lexicon of the New Testament and Other Early Christian Literature,* 2d ed., rev. William F. Arndt and F. Wilbur Gingrich (Chicago: University of Chicago Press, 1957), 204. [7]John A. Knight, *Beacon Bible Expositions,* vol. 9, *Philippians, Colossians, Philemon* (Kansas City, Mo.: Beacon Hill Press, 1985), 122. [8]Pat Edwin Harrell, *The Letter of Paul to the Philippians,* The Living Word Commentary series, ed. Everett Ferguson (Austin: R. B. Sweet Co., 1969), 147-48. [9]J. Dwight Pentecost, *The Joy of Living: A Study of Philippians* (Grand Rapids, Mich.: Zondervan Publishing House, 1973), 239. [10]Gerald F. Hawthorne, *Word Biblical Commentary*, vol. 43, *Philippians,* ed. David A. Hubbard and Glenn W. Barker (Waco, Tex.: Word Books, 1983), 208. *ஹாவ்தார்ன் என்பவரின் விளக்கங்கள், விருப்பம் என்ற கருத்தையே ஆதரிக்கின்றன, ஆனால் "எந்த ஒரு பதிலுக்கும் ஒருவர் கையெழுத்துப் பிரதியின் ஆதாரத்தை மாத்திரம் முழுமையாகச் சார்ந்திருக்க வேண்டியிருந்தால், அவர் ... 'அவர் நிறைவாக்குவார்' என்ற கருத்தையே விரும்பித் தேர்ந்தெடுப்பார் ..." என்பதைக் கவனியுங்கள்.*

[11]Wendell Winkler, "Christian Fellowship; God Will Provide; Saints in Caesar's Household; Salutations and the Benediction," *A Homiletic Commentary on the Book of Philippians,* ed. Garland Elkins and Thomas B. Warren (Memphis: Getwell church of Christ, 1987), 285. [12]Earl F. Palmer, *Integrity in a World of Pretense: Insights from the Book of Philippians* (Downers Grove, Ill.: InterVarsity Press, 1992), 176. [13]Adapted from unpublished class notes by David L. Roper: "Victory over the Challenge of Life." The list is based on a number of counseling books. [14]Malone, 122. [15]Pentecost, 245. [16]Ibid., 244. [17]Ibid. [18]Warren W. Wiersbe, *The Bible Exposition Commentary,* vol. 2 (Wheaton, Ill.: Victor Books, 1989), 99. [19]Pentecost, 243-44.